





ஓலை 128| ஓசை 251| ஜூன் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



கலங்காதிரு மனமே

மலர்ந்தும் மலராத

அச்சம் என்பது மடமையடா

கண்ணே கலைமானே

கவிஞர் கண்ணதாசன்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை**

## பொருள்

**பெண்ணைச் சிறைவைத்துக் காக்கும் காவலால் என்ன பயன்? ஒவ்வொரு பெண்ணும் மன அடக்கத்தால் தன்னைத் தானே காத்துக் கொள்ளும் பண்பே முதன்மையானது.**

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்!




கற்றும் தெளியாதாள் - நெஞ்சில்
கருணை அறியாதாள்;
முற்றும் தூற்றிடுவாள் - நாளும்
முழுமைக் கூற்றினளாள்!

அறிவியல் கற்றவளாம் - வானம்
அளந்த அறிவியலாம்;
நெறியியல் தான்மறந்தாள் - தூற்றி
நித்தம் கூற்றினளாள்!

பரியாய் ஓடிடுவாள் - பாங்காய்ப்
பண்பை ஓட்டிடுவாள்;
வரிப்புலி போல்பாய்வாள்- மொத்த
வஞ்சகக் கூற்றினளே!

பொன்னும் பொருளுக்கும் - அணியும்
புதுப்புது ஆடைக்கும்,
மின்னும் அணிகலனும் - ஒப்பனை
மின்னிட விருப்புடையாள்!




உயர்ந்த நிலையிருந்தும் - மேலும்
உயரத் துடித்திடுவாள்;
அயற்சி இல்லாமல் - தூற்றி
அகமும் குளிர்ந்திடுவாள்!

உயர்ந்த பொறுப்பிருந்தும் - சிறிதும்
உளத்தில் பொறுப்பில்லாள்;
துயர மில்லாமல் - துணிந்து
துயரில் துடித்திடுவாள்!

இப்படி இருப்பவளும் - வாழ்வில்
இணையாய் வாய்த்துவிட்டால்
எப்பவும் கூற்றுவனாய் - இவளே
இருப்பது போலாகும்!

**இலக்கணக்குறிப்பு :**

**குறளடி இரண்டு வரும் சமநிலைச் சிந்து - இரு சீரிரட்டை சீரிரட்டை; ஓரடியின் மோனைத்தொடை தனிச்சொல்லான எடுப்பின் முன்னும் பின்னும் உள்ள அரையடி ஓரடியாகவே கொள்ளல் வேண்டும்.**

# எழுதாத கவிதை

ஒருவேளை அன்றுநேர் இக்கவிதை தாளில்
உருவுறாது இன்றுகூட சொல்லா எழுதா
ஒருவலி வேதனை தாங்க தருகிறது.
ஊருடனே ஒட்டா உணர்வு.

இன்றுகூட காலை கதிரவன் ஏறிநிற்க
இன்றுகூட காலை கதிரவன் அவ்வுணர்வால்
நன்றாக உள்ளத்தின் கண்ணில் தெரிகிறான்
அன்றுகூட இவ்வுணர்வு தான்.



கவிதை கிறுக்குவதாய் குற்றந்தான் சாட்டுகிறார்
ஆவியினை வாட்டியென் நெஞ்சே உருக்கி
கவிதைதான் ஆட்டியெந்தன் நெஞ்சில் தவிக்கிறது.
ஏவிவேலை வாங்குதுவே இங்கு.

கவிதைதான் கண்ணில் கனவு தருகிறது.
ஆவியாய் நள்ளிரவில் அல்லல் தருகிறது.
சேவிக்க காதல் தருகிறது எண்ணி
தவிக்கிறது ஏங்குதுவே நெஞ்சு.

எழுதவோ வேண்டாவோ எண்ணியே நெஞ்சில்
எழுது நடுக்க உணர்வு அவளேதான்
கண்ணில் விழுகிறது நாசாவே கண்டறியா
ஏழுலகு காணா நிலவு.

எழுதறியா சின்ன குழந்தையின் கைகள்
எழுதிடவே தன்கரங்கள் கொண்டு அணைத்து
எழுதிட வைக்கிறாய் நானோ கவிதை
எழுத அறியாதோன் தான்.

என்னவளே என்னிதயந் தன்னை அணைத்திங்கு
சின்ன கவிதை எழுதிட சொல்லிக்கொடேன்.
தாளில் எழுதவில்லை இன்றுகூட இக்கவிதை
தாளில் எழுதாது தான்.

குறிப்பு.-
இக்கவிதை இதழகலி வகையை சார்ந்தது படிக்கும் போது இரண்டு உதடுகள் ஒட்டாது.இக்கவிதை வெண்பா இலக்கண படி எழுதப்பட்டது.

கவிஞர் முனைவர். பு. பேச்சிமுத்து, விருதுநகர்

## பாவகை : கலிவெண்பா

வணிகத்தைச் செய்திட
வந்தோர் செயலில்
வணிகத்தால் கொள்ளை
வரம்பழிதல் பார்த்தே
துணிவுடன் மேடையில்
துள்ளியுரை ஆற்றல்
அணிதிரள் மக்கள்
அழுகையை ஓட்ட
ஆக்கத்தை விற்றே
அலைகடல் தன்னிலோட்ட
ஊக்கமாய்ச் சென்றிட
ஊனமில் கப்பலைத்
திக்கெட்டும் செல்லவே
திண்மை மிகுந்திட
மக்கள் பயணிக்க
மாண்புடன் வாங்கிட
வெஞ்சின வெள்ளையர்
வேட்டையில் சிக்கிட
அஞ்சாமல் செக்கிழுத்த
அன்பானச் செம்மலவர்
துஞ்சாமல் ஆங்கே
துணிவுடன் நூலெழுதல்
இஞ்சிய மெய்சோர
இன்னல் அடைந்திடப்
பஞ்சையாய் ஆனார் பரவு.




கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

கலகல சிரிப்பு
கவலையைப் போக்கிற்று
மல மல கண்ணீரும்
மறைந்தே போயிற்று
@
சலசல நீரோடை
அவள் கொலுசிடம் தோற்றது
வள வள பேச்சு
அவன் மனதைத் தொட்டது
@
குளு குளு அறையில்
அமைச்சர்களுக்குத் தித்திப்பு
அன்றே பரபரப்பானது
செய்தியாளர் சந்திப்பு
@
உழைப்பாளர் உடம்பில்
கசகசவென வேர்வை
"சுட சுடக் கொடு
சம்பள உயர்வை "
@
தடதடவென தட்டுமோசை
திறந்து பார்த்தேன்
திடுதிடுவென ஓடினான்
திகைப்பில் திருடன்



கவிஞர் சே.ஈ. ஸ்ரீதரன், இலங்கை

# நினைவுகளில் நனைகிறேன்

நினைவுகளில்
ஆடுகிறேனே

சாரலாய் விழுந்து
நெஞ்சத்தை வீழ்த்தினாயே

மகிழ்வின் தொட்டபெட்டாவில்
ஆடுகிறேனே

நினைவுகளில் நனைகிறேனே
கற்பனையில் பறக்கிறேனே



கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

9. சுரமஞ்சரியார் இலம்பகம் .



வந்த வருகை யாது கருதி ?
அந்தக் கிழவனிடம் சுரமஞ்சரி கேட்க
"சிந்தைநலி கின்றதிரு நீர்க்குமரி யாட ,
வந்திலதி னாயபய னென்னைமொழி கென்றாண்"
(அதனாலாகிய பயன் யாது? கூறுக . என்றாள்)
முந்திநலி கின்ற முது மூப்பொழியு மென்றான் (2020)

மிகுதியாக நகைத்தாள் அவனைக் கண்டு
"தகுதியான பதிலா நீர் கூறுவது ?
வெகுமதி கேட்டு வந்திருக்கலாம் என்னிடம்
தகுமா இளமை கேட்டால் எப்படி?"

"உலகில் உம்மைப் போல் மூடர் கண்டிலை
பலமான விருந்து உணவு கொள்
நலமாக உண்டு உயிரோடு செல்வீர்"
குலமகள் அவ்விடம் விட்டு அகன்றாள்.

எண்ணெய் தேய்த்து சனி நீராடி
வெள்ளை ஆடை கொடுத்தாள் சேடி
உண்ட களைப்பு தொண்டனுக்கும் உண்டு
கண் அயர்ந்தான் பஞ்சு மெத்தையில் .

பின்னர் சாமகீதம் ஒன்று பாடினான்
என்ன சொல்ல, கேட்டு மயங்கினாள்
தன்னை மறந்தாள் சீவகனை நினைந்தாள்
அன்பு முற்றி நெஞ்சுருகி நின்றாள்

"இங்கு பக்கத்தில் இருக்கிறான் சீவகன்
அங்கு சென்று அழைத்து வாருங்கள்"
தங்கியிருக்கும் தோழியரிடம் முறையிட்டாள்
எங்கும் காணாமல் திரும்பினர் சேடியர்

காமன் கோட்டம் சென்று வேண்டினாள்
"என் உள்ளம் கவர் கள்வன் எங்கே?"
"சீவகனை இனி விரைவில் கொள்வாய்"
தோழன் புத்திசேனன் மறைவில் பேசினான்.

அதனை காமன் கூறியதாகக் கருதினாள்
முதியவர் இருக்கும் இடம் வந்தாள்
அதிசயம் மீண்டும் காற்றினில் கீதம்
அதே மயக்கும் சீவகன் குரல்

சீவகனைக் கண்டு நாணினாள் சுரமஞ்சரி
அவனையே கண்டாள் முதியவர் இல்லை
அவளுக்குப் புரிந்தது குமரியாட வந்தவன்
சீவகனே, உடலும் உயிரும் இணைந்தன.

விண்ணும் மண்ணும் யாவும் விலையாகுமா ?
பெண்ணா அவள்! மின்னும் இடையாள்!
கண்களால் அவளைத் தழுவி நின்றான்.
எண்ணியபடி அவள் அவன் காலடியில்.

தொடரும்...

கவிஞர் ந. திருக்கோமு

# புணர்ச்சி மகிழ்தல்

## அதிகாரம் : 111

கண்டுகேட்டு உண்டுமுகர்ந்து
தீண்டியறியும் புலன்களின்.
ஐந்தின்பமும் வளைபூட்டிய
மங்கையிவளிடம் மட்டுமேயுளதாமே.

நோய்க்குமருந்தாய் நோயற்ற
பிறவனவே இருந்திடினும்.
அணிபூண்டமங்கை ஆக்கும்நோய்க்கு
இவள்மட்டுமே மருந்தாமே.

தன்காதலியின் மென்தோளில்
துயில்கொள்ளும் இன்பம்போல்.
திருமாலுலகாம் வைகுந்தத்தில்
பெறுமின்பம் இனிதில்லையாமே.

பிரிந்திடின் சுடுகின்றதும்
நெருங்கிடின் குளிர்ந்திடுமான.
இருவகைஎரியும் புதுநெருப்பை
மங்கையிவள் எங்குபெற்றாளோ?

மலரணிந்த கூந்தல்படர்ந்த
மங்கையிவள் தோள்கள்.
விரும்பியநேரம் கைவந்து
இன்பந்தரும் பொருளின்இனிதாமே.

இளமங்கையின் மென்தோள்களை
தீண்டையிலெல்லாம் உயிர்தளிர்ப்பதால்.
இவள்தோள்கள் நிஜமாய்
அமிழ்தால் ஆனவையாமே.



தாம்ஈட்டிய பொருளை
தன்வீட்டிலிருந்து பகுத்துண்ண.
பெறுமின்பம்போலே இம்மங்கையை
தழுவிட அடையுமின்பமுமே.

இடையே காற்றுபுகுந்து
பிளந்துசெல்லாதபடி இறுகத்தழுவல்.
விரும்பிக்கூடும் காதலரிருவர்க்கும்
இனிமைதரு மின்பமாமே.

அளவோடான ஊடலும்
அதன்பின் கூடிக்கழித்தலுமே.
காதல்வாழ்வு நிறைவேறப்பெற்ற
காதலரடையும் பயன்களாமே.

நூற்பொருளை அறியும்பட்சம்
அறியாமையைக் காண்பதுபோல்.
செவ்வணிகள் அணிந்தோளை
சேருந்தருணம் இன்பம்பெருகுமாமே.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# சிவசக்தி

முத்திரியும் ஒருமித்து
எழில் தழல் எழும்பும்;

நாத சம்மியத்தின்
நாதமது எதிரொலிக்கும்;

ஒத்தே ஒருங்கி
ஒரு ஆனந்த நடனம்; காண்பீர்!

எதிரொளிப்பர் சம்புவும் சாம்பவியும்
உச்சியில்

அமுத தாரை முடிவிலி
முடிக்கும்

குண்டலினியவள்
இனிதே எழும்ப



கவிஞர் சசிகலா விஸ்வநாதன், பெங்களூரு

# நட்பின் காலம்

கண்ணாடி கிளாஸில்
வாங்கிய சிங்கல் டீயை
நானும் நண்பனுமாய்
ஒன்றாய்க்குடித்த காலமுண்டு.
அரைபிளேட் சிக்கன் பிரியாணியை
இருவருமாய்
உண்டுக்களித்த நாட்களுமுண்டு.
ஒரு பழத்தைப் பட்சாதாபம் பாராமல்
இருவரும் மாறிமாறி
கடித்துச் சுவைத்ததுண்டு.
என் முதுகில் அவனும்
அவன் முதுகில் நானுமாய்
சாய்ந்தபடி எங்களை நாங்கள்
ஆசுவாசப் படுத்திய நேரமுண்டு.
என் மடியில் அவன் தலைவைத்து
படுத்துறங்கியது போலவே
அவன் மடியில்
நானும் கழித்த நாட்களுமுண்டு.
என் கன்னத்தில் வழிந்த
கண்ணீரை நட்பின் இழையோடு
அவன் விரல்கள்
ஆறுதலாய்த் துடைத்தெடுத்ததுண்டு.
வருடத்திற்கு இருமுறையென
எங்கள் பிறந்தநாளை இருவரும்
கொண்டாடி மகிழ்ந்ததுண்டு.
பாசாங்கற்ற
எங்கள் பால்யகால நட்பினை
இரண்டாய்க் கூறுபோட்ட
அந்தப் பணப் பரிவர்த்தனையை
தினமும் சபித்திடாமல்
நகரவில்லை
எங்களின் நாட்கள்!



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# தமிழே! தமிழர் உயிரே!

அன்னை கற்று தந்த அன்னைமொழி
அன்பும் பணபும் அமைந்த மொழி
அழகு நிறைந்த அமுத மொழி
அகிலமெங்கும் காத்த அருமையான மொழி.

இலக்கணம் தந்த இலக்கிய மொழி
இன்பம் தந்த இனிமையான மொழி
இதயம் தொட்ட இசையான மொழி
இன்னுயிர் கொடுத்த இதமான மொழி.

கவிஞர்களை உருவாக்கிய காதல் மொழி
கண்ணிற்கும் இனிய காவிய மொழி
காதோடு பேசும் காற்றின் மொழி
காலத்திற்கும் அழியாத கானல் மொழி.

தங்கத்தில் கண்ட தங்கமான மொழி
தகதகவென மின்னும் தமிழன் மொழி
தகப்பன் கொடுத்த தன்னிகரில்லா மொழி
தங்கையும் கற்ற தலையாய மொழி.

உலகமெங்கும் திகழும் உன்னத மொழி
உயர்வைக் கொடுத்த உண்மையான மொழி
உள்ளம் பேசும் உவகை மொழி
உவமையும் காட்டிய உவமேய மொழி

பார் சிறக்க பார்த்த மொழி
பாவையும் பயின்ற பாடல் மொழி
பாலும் தேனாய் பாலாறான மொழி
தமிழே எனது உயிரே வாழ்க!



கவிஞர் ம. ஜெ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# அதிரடியாய்ச் சதிராடினாய்

அதிரடியாய்ச் சதிராடினாய்
கதிரொளிக் கண்களால்
************************



அற்புத நர்த்தனமாடும்
அழகுச் சிலையே
ஆர்ப்பரிக்கும் மனதினில்
ஆனந்தமானேன் கண்ணே

எழிலோவியம் நீதானே
எண்ணமதில் நிறைந்தாயே
ஈர்த்திடும் வனப்பினில்
இயைந்து விட்டேன்

பாதக் கொலுசின்
ஓசையில் இதயத்துடிப்பே
பாவையின் பார்வையில்
பாவொன்று எழுதுகிறேன்

காதோரம் கிசுகிசுத்து
காதலைக் கூறிடவா
நாணத்தில் நளினமும்
நாட்டியம் ஆடிடுதே

அதிரடியாய்ச் சதிராடினாய்
கதிரொளிக் கண்களால்
சுரங்களை மீட்டியே
சுகராகம் இசைத்திடு

வஞ்சியே வசந்தமாய்
வந்திடுவாயே வாழ்வில்
ஆரணங்கே உன்னாலே
ஆனந்தம் என்னுள்ளே

விழியசைவில் விந்தைகள்
புரிகிறாய் அன்பே
வியப்பானேன் வித்தகியே
வியனுலகம் மகிழட்டுமே

ஆடலரசியே பரதக்கலையில்
ஆர்வமது பெருகுகிறதே
பழமையின் பெருமைதனை
பாரினில் பரப்பிடுவாயே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# அப்பா

ஆலமரமாய் குடும்பத்தை தாங்கும்
வேர்களின் வேதனை அப்பா

குடும்பத்தின் அழகிய இலக்கணமாய்
தவறுகளே இல்லாத அகராதியாய்
அப்பா

வியர்வை துளிகளை ஆடையாய்
கொண்ட கிழிசல்களின் முகவரி
அப்பா

கோபத்தின் முகமூடியில் தாய்மையின்
காவல் தெய்வமாய் அப்பா

இறுதிவரை வில்லனாய் விலகி
நிற்கும் நல்லவராய் அப்பா

குடும்பம் என்னும் ஒற்றை
புள்ளியில் தொலையும் முற்றுப்புள்ளி
அப்பா

சிந்தையின் சிகரத்தில் சிரிப்பின்
முகமூடியில் மூச்சுத்திணறலாய்
அப்பா

தாய்மையின் பின்னால் நிழலாய்
நிற்கும் தாயுமானவர் அப்பா



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# உறவுகள்

உலகில் துரோகம் நினைக்காத
ஒரே உயிர் தாயானவள்.
பெண்களை அடக்கி ஆள நினைக்காத
உயிர் தந்தை.
தோள் கொடுக்க தோழன் இருக்கும்வரை
தோழியானவள் அதிஷ்டசாலி.
தட்டி கொடுத்து ஆறுதல் கூறும்
ஆசான்கள் பெருமையானவர்களே.
தாலாட்டு பாடி உறங்க வைக்கும்
பாசத்திற்கு ஈடாகுமா.
நிலா காட்டி சோறு ஊட்டும்
பழக்கவழக்கங்கள் மறைந்து போனதே.
வீழ்த்த நினைக்கும் இந்த உலகில்
கை கொடுக்கும் நண்பர்களே.
நிலையில்லாத சூழலில் நிலையாய்
நிற்கும் உறவுகளே.!



கவிஞர் மோனிஷா

# நாளெல்லாம் திருநாளே!

நசநசப்பின் நச்சரிப்பில்
நனைந்தே நகர முடியாத
அசதியின் அவதிக்குள் அடிபட்டு
கசகசப்பின் வியர்வை மழை
கனத்தே உடையெலாம் தாக்க
எரிமலைக் கொதிப்பை
இதயத்தில் எறிந்ததுபோலே
எரிச்சலின் தீக்குள்
என்னை அடைத்து
புறத்தோலின் துளையெங்கும்
பொங்கிடும் அனலை வாங்கி
நடக்கவும் நகர்வும் தயங்காத
கால்களுக்கு சூட்டுச் சங்கிலி பூட்டி
வெளியெங்கும் வாதையை விதைத்து
வெளிச்சத்தின் போர்வைக்குள்
தன்னை ஒளித்தபடி
உலகை நகர்த்திட
ஒளிர்ந்திடும் வெயிலைக் கண்டு
புன்னகை மலர்களைப் பூக்கவைத்து
பூபாளத்தை வரவேற்கவென
பரிசாகப் பிரசவித்து
காற்றில் ஊசலாடும்
சரக்கொன்றை மரங்களுக்கு
நாளெல்லாம் திருநாளே.



கவிஞர் இளையவன் சிவா

# மடிந்ததா மனித நேயம்



உலகத்தின் உயிர்களுக்குத் தலைவன் ஆனாய்;
உயர்பிறவி எனச்சொல்லும் தகுதி உண்டா ?
இலக்கினிலே மாறிடாத ஏவு கணையாம் ;
இனப்பகையாய் உயிர்கொல்லும் கண்டு பிடிப்பாம் !
சிலநொடிகள் மொத்தஊரும் சிதைந்து போகும் ;
சிந்துகின்ற குருதியிலே மனிதம் சாகும் !
நலம்கொண்ட அமைதிபேச்சில் முடிவும் வருமா ;
ஞாலத்தை அச்சுறுத்தும் போர்நின் றிடுமா !

மணிப்பூரில் நிர்வாணக் கொடுமை ; புணர்ச்சி !
வகுப்புவாதத் தீமையாலே உலகில் குனிவு !
தணியாத காமத்தால் கொல்லும் மனையாள் ;
தந்திரமாய் தேனிலவில் கணவர் மாய்ப்பாள்!
திணித்திடுவார் தீண்டாமை ; நீரில் நஞ்சாம் ;
தீயோர்க்குத் துணைபோகும் காவல் நெஞ்சாம் !
துணிவில்லா நீதிமன்றக் கோணல் தீர்ப்பால் ;
சூழ்ந்திட்ட குற்றங்கள் கடந்தே ஆள்வர் !

கல்லூரி வளாகத்தில் காமத் தொல்லை ;
கண்டுபிடித் தாரில்லை அந்த சாரை !
கொல்லும்போ தைமிட்டாய் பள்ளி அருகில் ;
கொடுமைபாலு ணர்வுமேவும் பள்ளி தலைமை !
எல்லோரும ஏற்கலானார் முதியோர் இல்லம் ;
எந்திரமாம் வாழ்வினிலே உறவும் இல்லை !
வல்லவராய்த் தீதினரே வாழு கின்றார் ;
வகையொழிந்த நல்லவரோ வாடு கின்றார் !

கவிஞர் ஆ. சீ. கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

# தொடுவானம் தூரம் இல்லை

முடியும் என்றே
முயற்சி செய்வோம்

முடியாதவையும் எளிதாய்
முடித்து வைப்போம்

கண்களை மூடினால்
கூடிடும் துயரம்

பெண்களும் நாடினால்
ஏறலாம் உயரம்

மண்ணையும் அளப்போம்
விண்ணையும் பிளப்போம்

விரிக்கும் வரையில்
சிறகும் பாரம்தான்

பெரிதான செயலால்
தொடுவானமும் தூரமில்லை



கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# இணக்கம் பேணுவது எப்போது?

விசும்பு அதிர எக்காளமிட்டு
வைகறை அமைதி கெடுத்து
இல்லா தவன் பெயர்ச் சொல்லி
இன்னல் இழைத்த இன்னார்.
கல்லெறிந்தால் தீமை விலகுமென
கற்படுகை நகரில் உலா.
அக வெறுப்பை வீசி எறிந்து
இணக்கம் பேணுவது எப்போது.



கவிஞர் செ. தமிழ் நேயன், தமிழ் நாடு

# தானியங்கி

கைகள் நிறைய முட்கள்
கால் தடுக்கும் விலங்கு
நெஞ்சம் முழுக்க காயம்
பெண்ணுடல் மட்டும் தானியங்கி



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# இசையும் கவியும்

## (கவியரசர், மெல்லிசைமன்னர் பிறந்தநாள் கவிதை)



இசையும்
கவியும்
இணைந்து
பிறந்தது
எங்ஙனமோ

கவியரசும்
இசையரசும்
இணைந்து தந்த
பாடல்கள்
இனிவருமோ
▯
காலத்தால்
அழியாத
பாடல்கள்
பல படைத்தீர்

காலனும்
பணிமறந்து
ரசிக்க பல
மெட்டெடுத்தீர்
▯
வாழ்கையின்
வேதனையை
பாடல்களில்
போட்டு வைத்தீர்

மெல்லிசையை
வேதனைக்கு
மருந்தென
மெட்டுவைத்தீர்
▯


திரையுலகை
தசாப்தங்கள்
இருவருமே
தானாண்டீர்

வானில் இசை
படைக்க வேண்டி
இருவருமே போய்
சேர்ந்தீர்
▯
வானொலியிலும்
வான்வெளியும்
எம்மோடு
உள்ளவரை

உங்கள் பாடல்களும்
கானங்களும்
வாழும் நாங்கள்
உண்ணும்வரை

கவிஞர் சரவணன். மு, சித்தர்காடு (மயிலாடுதுறை)

# வாசிப்பும் நேசிப்பும்



புத்தகம்
வாசித்துக் கொண்டிருக்கிறேன்
புத்தகமோ
என்னை வாசித்துக் கொண்டிருக்கிறது

பூமியை
நேசித்துக் கொண்டிருக்கிறேன்
பூமியோ
என்னை நேசித்துக் கொண்டிருக்கிறது

இயற்கையைச்
சுவாசித்துக் கொண்டிருக்கிறேன்
இயற்கையோ
என்னைச் சுவாசித்துக் கொண்டிருக்கிறது

நீயும் வாசி
நீயும் நேசி
நீயும் சுவாசி


அவ்வாறாயின் நீயும்
வாசிக்கப்படுவாய்
நீயும் நேசிக்கப்படுவாய்
நீயும் சுவாசிக்கப்படுவாய்

ஓ!
புத்தகம் பூமி இயற்கை
இம்மூன்றுமே
உனதும் எனதும் மூல முகவரிகள்
மூன்றையும் முறைப்படி பேணின்
இவையே நமது முறையான அகவரிகள்

ஆம்
வசிக்கவே வந்தோம்
வசிப்போம்
வாசிக்கவே பிறந்தோம்
வாசிப்போம்
நேசிக்கவே உருவெடுத்தோம்
நேசிப்போம்
சுவாசிக்கவே உயிரெடுத்தோம்
சுவாசிப்போம்!

கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன் (சரவணமுத்து நவேந்திரன்) கிழக்கிலங்கை

# நானாக நானில்லை



தவறுதலாய் உன்னில் என் பார்வை
விழுந்ததே தவிர
நானாக உன்னை உற்று நோக்கவில்லை.

இருந்த போதும்
அன்பே நீ என் வாழ்வினில்
வானவில்லாய் வந்து
கானல் நீராய் மறைந்து போகிறாய்.

ஆனாலும் ஏனோ தெரியவில்லை
இப்போதெல்லாம் என் பார்வை
உன் பக்கமே திரும்புகிறது
என் உள்ளுணர்வுகளையும் மறந்து.

என் கண்கள்
தினமும் கனவுக்கு தந்தியடிக்கிறது
கனவிலாவது உனது தரிசனம்
மீண்டும் கிடைக்க வேண்டுமென்று.

அன்பே
உனது பெயரை உச்சரிக்கும் போது மட்டும்
ஏனோ எனது குரலும் இனிமையாய் இருக்கிறது.

அன்பே
உனது பெயரை எழுதும் போது மட்டும்
ஏனோ எனது கையெழுத்தும் அழகாய் அமைகிறது.

உயிரே உன்னை "மிஸ்" பண்ணும்போது தான்
என் நினைவுகள் அதிகமாய் உன்னை "விஷ்" பண்ணுகிறது.

என்னிதயம் கூட அதன் பரிபாசை மறந்து
உன் பெயரையே தினம் உச்சரிக்கிறது.

ஏனிந்த மாற்றம் என்று
என்னை நான் கேட்கையில்
உனதான ஆட்சியில் ஆக்கிரமிக்கப்பட்ட
எனதான மன(சு)சாட்சி
நீயாக நீயில்லை என்கிறது.

கவிஞர் நபீல் இப்னு இஸ்மாயில், மடகஹவத்த கலேவெல

# ஒன்றே ஒன்றுதான்

இறக்கைகளை மடித்தும்
விரித்தும் குஞ்சுகளை
அரவணைத்துக் கொள்வது போன்றும்

தொட்டதும் சுருங்கும் தொட்டாச்சிணுங்கி
போல உணர்வுகளை மடித்து வைப்பதும்

விழிகளை விரிக்க விடாது
தூசுகளைத் தூவும் கடுங்காற்றின்
அத்தனை வதைகளையும்
தாங்கி மூடும் நினைவோடும்

கானகம் நடுவே பயணித்துப் போக
சூழும் கிளைகளோடு சண்டை பிடித்து
சமாளித்துப் போகும் அத்தனை வலிகளிலும்

திட்டமிடப்படாத ஒரே ஒரு எதேச்சையான
தவறொன்றுதான் சமூகப் பிடிமானங்களுக்குத்
துணை போனது



கவிஞர் சேஹூ மொஹம்மது பெனாஸிரா

கனவில் காதலையும்
நினைவில் சாதலையும்
எதிரில் மௌனங்களையும்
தருவது ஏன் தோழி?

உருமாற்றம் வேண்டுமென
உள்ளம் துடிக்குதடி
சில நிமிடமே ஆனாலும்
நீ கொஞ்சம் குழந்தையாய்.

உன்னருகே இருந்தாலும்
உருவமற்றவனாய் உலவுகிறேன்
உன்னிடத்தில் எந்தன்
உள்ளத்தை தொலைத்து விட்டு

உனக்காய் உருவானவன்
உன்னாலே உடைகிறேன்
உருவத்தை விட்டு விட்டு
உள்ளத்தை அறுத்து விட்டாய்



திசையில்லா பயணமாய்
திக்கற்று திரிகிறேன்
திடமான நம்பிக்கையும்
தினம் எடை இழக்குதடி

கொடுக்காத நம்பிக்கையை
கையில் வைத்து காத்திருக்கிறேன்
காலம் கடந்த காலங்களில்
கடந்துபோன காதலை தேடியே.

கவிஞர் ஆனந்த் குவைவ. ஜெயராமன், சேத்தியாத்தோப்பு

# அன்பு

அன்பால் எதையும் சாதிக்க முடியுமே!
ஆண்டாள் ஆண்டவனையே
அன்பால் அடைந்தாளே!
இன்பமும், துன்பமும்
எல்லோருக்குமே வருமே!
ஈதலினால் இன்பம் அடையலாமே
உன்னை நீ எப்படி அறிந்தனையோ,
அப்படியே ஊரையும்
நீ அன்பால் நேசிக்கலாமே!
எந்த நாளையும்
நல்ல நாளாக நினைத்தால்,
ஏற்றமே தந்து உன்னை ஏற்றி விடுமே!

ஐவகை பூதங்களும்
உனக்கு துணை வருமே!
ஒரு மரம் தோப்பாகுமா?
அன்பை விதைத்தால்
ஓராயிரம் செல்வங்களை பெறலாமே!
அவ்வையின் ஆத்திச்சூடி
நமக்கு ஒரு வழிகாட்டியே!
அஃதே உலக பொதுமறை
வள்ளுவனின் வாக்கும் கூட.
" அன்பிற்கும் உண்டோ
அடைக்கும் தாழ்" என்றாரே!
அன்பால் எதையும், எப்போதும்,
எங்கும், எப்படியும் சாதிக்கலாமே!
அன்பே சிவம், அன்பே ஆனந்தம்.
அனைத்திற்கும் அன்பே முதலிடமே!
கங்கையும், காவிரியும்
வற்றாத நதிகள் என்றால்,
அன்பும் எப்போதுமே
வற்றாத ஜீவ நதி ஆகுமே!



கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# நாளைய வரலாறு

வானம் போல் இணையில்லா
சாதனைகளின் சொந்தமே
இளைஞர்கள் என்பது பெருமையின் உச்சமே.

எதிர்கால தலைமுறை ஏற்றும் பெற்றிட
சாதனைகள் படைத்து சரித்திரம் கண்டிட
இளைஞர்கள் என்பது முன்னேற்றத்தின்
ஏணியாய் உழைத்திடும் காலமே.


எதிர்கால முன்னேற்றம்
இளைஞர்களின் கையில்
நீல வானமாய் பறந்து பட்ட அறிவுடன்
உழைக்கும் இளைஞன் பெருமையின் உச்சமே.

மூத்தோர் சொல்லே மந்திர உச்சாடனமாய்
ஏற்று நடக்கும் இளைஞன் என்றும்
பெரியோரை போற்றும் சாதனை நாயகன்.

மூத்தோர் ஆலோசனையும்
கல்வி அறிவும் சாதிக்கும் எண்ணமும்
ஒருங்கே பெற்ற இன்றைய இளைஞன்
நாளைய வரலாறு.

விஞ்ஞானமும் அறிவியலும்
வானளவு வளர்ந்தாலும்
உழவும் உழவனும் நமது இரு கண்ணாய்
போற்றி காக்கும் உயர்ந்த எண்ணம்
இளைஞர்களுக்கு வேண்டும்.

இளைஞர் என்பது பேரல்ல பெருமை
நாளை உலகின் நம்பிக்கை இவனே
வருங்கால தூண்களாய்
வரலாறு படைப்பவர்கள்.



கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாதோப்பு

# உறவுகளின் நிலை

சாலையில நடந்த விபத்தில
அப்பா அம்மா இறந்தாங்க
இறந்த அப்ப வந்தவங்க
அப்பா கூட
பொறந்தவங்க நாலுபேரு
ஆணு ரெண்டு
பொண்ணு ரெண்டு
அம்மா கூட
பொறந்தவங்க நாலுபேரு
ஆணு ரெண்டு
பொண்ணு ரெண்டு
இவங்க இப்ப
எங்க போனாங்க தெரியல?

பொட்டைப் புள்ளைகள
விட்டுட்டு செத்து
போனதா அப்பா அம்மாவை
திட்டிட்டு இருந்த
அந்த உறவுக்காரங்க
எங்க போனாங்க தெரியல?

நம்ம வீட்டுக்கு
இதுக வந்திரக் கூடாதுன்னு
பெரியப்பன் சித்தப்பன்
பெரியம்மா சித்தி
மாமன் அத்தை
கை கழுவி போனவங்க
எங்க போனாங்க தெரியல

அப்பா அம்மாவை
திட்டின உறவுக்காரக
வீட்டு கதவை
இழுத்து சாத்துன
அவங்களும்
எங்க போனாங்க தெரியல



திக்கத்து நிற்கிறோம்
வக்கத்து போனோம்
வாழ முடியாதுன்னு
எப்பவும் நினைக்கல
இவங்க முன்னால
உசந்து காட்டணும்

உறவுகளோட நிலை
எங்களுக்கு
வாழக் கத்து கொடுத்திருக்கு
எங்களுக்குள்ள இருக்கிற
சுயத்தை அடையாளம் காட்டியிருக்கு
அதோ ஒரு வெளிச்சம்
அதை நோக்கி
எங்க பயணம்.

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# தேன் வால் பல்லி

கடலலைகளை மடித்துப்போட்டபடி
ஆழமான மூளை உப்புக்கரிக்கிறது;

பல்லி நீட்டிய நாவில்
சிக்கிய ஈசல்களாக ஓர்
கொழையின் வார்த்தைகள்;

யாரோ இட்ட முட்டையை
நானே அடைகாப்பேன் எனும் கோழியாக
இன்று மழைக்கும் முன்பாகவே
உளருகிறது ஓர் தவளை;

தவளையோ தன்னை
முதலையென உருவகப்படுத்தி
நாக்கு இல்லாப் பிராணியாகிறது!

பாம்பு அஞ்சிக் கொத்துவது போல
மனிதன் அஞ்சுவதால் சாகிறான்;


கடல் எனத் தன்னைப் பெரும்
பரப்பாய் எண்ணி வேகுகின்றன
இலையை நம்பி மறையும் விதைகள்;

விதைகள் தனக்கு உண்டென்ற
ஆணவத்தில் அவிழ்ந்து போகிறது
கட்டாத ஒரு வேட்டி;

இடையில் புகுந்து இடறு செய்வோர்
அடை நெறியில்லா ஆலகாலக்
கற்பனை விஷத்தைக் காட்டிலும்
அன்னார் பிறப்பே அதுவாகும்.



கவிஞர் ஞானேசுவரன், வில்லிவாக்கம் (சென்னை)



கனவுகளில் மட்டும்
பயணித்த என்னை
உனது கால் சலங்கை
சுண்டி இழுத்தபோது
நெருக்கமாய் கட்டிக்கொண்டு
நெஞ்சில் வண்ணத்தை பூசி
எண்ணத்தை மாற்றி விட்டாய்!

யாருக்கும் தெரியாமல்
பதுக்கி வைத்து பாதுகாத்த
இதழோரப் புன்னகை விளக்கை
நீண்டு சுடர் விட்டு
கொடியேற்றி பறக்க விடும்
உன் லாவகத்தின் முன்னால்
தொழில்நுட்பம் எல்லாம்
தோற்றுப் போகிறது!

கற்றைக் குழலில்
ஓரிழை மட்டும்
உதடுகள் நோக்கி
ஊர்வலம் போவது
மின்சார உற்பத்திக்கா?
மின்னிதழ் முத்தத்திற்கா?
எதற்கென்று தெரியாமலே
உன்னைத் தீண்டிய காற்றிடம்
கையெழுத்துக் கேட்கிறது
என்னிதயம்!

வண்ணங்கள் பிறந்தது எதற்காக?
வாசனை முகிழ்ந்தது யாருக்காக?
வண்ணக்கொடியே!
உன் இதழோரம் வியர்ப்பதால்
என் இதயம் துடிக்கிறது!

எங்கே அந்த காற்று?
எத்தனை துணிவிருந்தால்
பலாச்சுளைக் கன்னங்களையும்
பாலாடை இதழ்களையும்
பரிதவிக்க விட்டு
பாதியில் இடம் பெயரும்!
முகிலை மூட்டையிலும்
தென்றலைத் தோளிலும் ஏற்றிக்கொண்டு
மின்னல் தேரேறி வருகிறது என்னிதயம்
உன் வியர்வை துடைக்க!

உன் பாதத்திற்கு
செம்பஞ்சுக் குழம்பு தடவி
இதயத்தில் நுழைகிறது காதல்!

கவிஞர் யாழிசைச்செல்வா, தேனி மாவட்டம்

# தன்னம்பிக்கை



உனக்குள் தான் எல்லாம் இருக்கிறது !
இல்லையென்று நீ என்றும் எண்ணாதே !
முடியும் என்று நீ முயலும்போது
உன்னை வெல்ல இங்கு யாரு ?

துன்பங்களை துணிந்து சந்திக்கும் போதுதான்
திறமைகள் யாவும் வெளியே வரும் !
சிறு தடைகள் ஏதுமில்லை என்றால்
எவ்வாறு வெற்றியின் எண்ணங்கள் தோன்றும் ?!

பிறர் வலிகண்டு உணர்ந்தவன் தான்
பல வழிகளை நன்கு அறிந்திருப்பான்!
பகுத்தறியத் தெரிந்தவன்தான் இவ்வுலகில் சிறந்தவன் !
எதையும் எதிர்கொள்பவன் வீரனாக வலம்வருவான் !

சொல்லில் உண்மை, செய்திடும் நன்மை !
எண்ணத்தில் எளிமை ! நெஞ்சத்தில் வலிமை !
தன்னம்பிக்கை எனும் ஆயுதம் இருப்பின்
யாவரும் சாதனையாளர்கள் தான் இவ்வுலகில்!!

கவிஞர் ரா. ஜோதிமணி, தாராபுரம்

பால்கார பெரியம்மா
பூக்கார சித்தி
தையல்கடை மாமா
முடி திருத்தும் அண்ணன்
தபால்கார சித்தப்பா
எதிர்வீட்டு அத்தை
பக்கத்துவீட்டு பாட்டி

உறுதியான எல்லைக்கோடுகளில்
செயல்களின் நேர்மை தெரியட்டும்

உறவுகளின் எல்லைக்கோடுகளில்
அன்பின் துவாரம் இருக்கட்டும்

தலைமுறைகள் மீட்டெடுக்கட்டும்
வெறிச்சோடிய வீதிகளை



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# நாற்காலி

இழவு வீட்டில் தீட்டான
வாடகை நாற்காலி
மறுநாள் கல்யாண வீட்டில்
புனிதமானது
எவ்வித பரிகாரமும் இல்லாமல்
மகிழ்வோடு அமருகின்றனர்
பாகுபாடு உடையவர்கள்



கவிஞர் முனைவர். அ.க. வீரவன்சாரா, சிதம்பரம்

# அந்த ஒரு நிமிடங்கள்

மின்னலாய் மனதில்
மிகச்சிறு சலனம்
மீளாத நினைவுக்குள்
மீண்டு வராத நிமிடங்கள்
மிதக்கும் நிலைக்குள்
சொற்ப நிமிடங்கள்



கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# தீண்டாத பூக்கள்


மங்கையவளின் கூந்தலுக்கு சென்று
அழகுதனை சேர்த்திடும் மலர்கள்

கைம்மையின் கூந்தலிடம்
பிரிவினை வாதத்தை
ஏற்படுத்தி விடுகிறது

நங்கைக்கு ஏற்புடையதாய்
திகழும் நன்மலரும்

கைம்மையிடமிருந்து விலகி
தீண்டாத பூக்களாய் ஒதுங்கியே!

நறுமணம் வீசும் மலரும்
தீண்டாமை கற்றதிங்கு!



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# மறுமலர்ச்சி!

புரிதலும், அறிதலும்,
புத்தாக்கம் தந்திடுமே!

இருக்கும் நிலையில்
மாற்றங்கள் பெருக்கிடுமே!

மாற்றங்களை ஏற்பதனால்
விளைவது மறுமலர்ச்சி!

கற்காலம் தொட்டு
கணினிக்காலம் வரை

மாற்றங்கள் பலவற்றால்
மனிதகுலம் பயனடைய

நேற்றிருந்த நிலைமாற்றி
பிறிதோர் நிலையளித்து

எல்லாத் துறைகளிலும்
ஏற்றம் தந்திட


காலத்தோடு இரண்டறக்
கலந்ததே மறுமலர்ச்சி!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி, பாண்டி

# கண்ணீராய்

அந்த மத்தியான வெயிலில்
நடை போட்டது பனிப்பழம் ஒன்று
உன் இதழ் தீண்டும் அவசரத்தில்
கரைந்தே போனது.
வழியில் இன்னும்
அதன் சுவடுகளை காண முடிகிறது
வீதி நெடுகிலும் கானல் நீராய்
என் கண்ணில் கண்ணீராய்.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# அம்மனைத் தரிசிக்கப்போறேன்

கிராமியக்_கவிதை_வடிவில்

அம்மனைத் தரிசிக்கப்போறேன்
மாமனேகூடநீயும்வாரியா.

ஆடிமாசம்தான் பொறந்தாச்சி
அம்மன்கோயிலும் புதுசுஆச்சு
ஊருசனம் ஒத்துமையாக கூடுடிச்சி
வணங்கி வரம் கேட்டு நிறைந்தாச்சு
வேப்பிலை ஆடையணிந்து நேர்த்திக்கடன்
நிறைவேத்துறாங்க கன்னிப்பெண்களுமே
கேட்டதெல்லாம் தந்து நம்மைக்காத்திடுவாள்
வேப்பிலைக்காரி அம்மா நம்மஉண்மைஇதுவே
செவப்பு பொட்டுவச்சி மஞ்சள்ஆடையுடனே
பக்தியுடன் சுத்திக் கோவில்வலம் வருவாங்க
கூழுகாய்ச்சி வயிறு நிறைந்திடவே ஊத்திடுவாங்க
மனசும் நெறஞ்சிடும் நமக்குதான் அந்நாளில்
வயிரும் குளிர்ந்திடும் கேட்ட வரம் கெடச்சிடும்
சீக்கிரமாக கன்னியருக்கும் மணம் முடியும்
மல்லிகைச்சரம் கூந்தலில் வெச்சிருக்கேன்
சாமிக்குப்போட ரோசாமாலையும் இருக்கு
கோயிலுக்கு போறேன் நானும் மாமனே
சாமிக் கும்பிட நீயும் நானும் சேர்ந்தே
போகத்தான் காத்து நிக்கிறேன்
சீக்கிரமே வந்திடு சேர்ந்து போகலாம்
வேறெந்த விகல்பமும் இதில் இல்லை
என் உள்ளம் கவர்ந்த மாமன் நீதானே
கைகோர்த்தபடி நாமிருவரும் போகலாம்
அம்மனை வணங்கிடுவோம் நாமுமே
ஆவணி கண்ணாலம் நடந்திடும் உறுதியே
மாலையத்தான் நாமும் மாத்திக்குவோம்
மனமகிழ்வுடனே இல்லறம் அமைப்போம்
மனிதநேயம் போற்றி நாமும் வாழலாம்.



கவிஞர் இரா. சீ. பாலகுமார், சந்தோசபுரம் (சென்னை)



## பலருக்கு

பேசிக்கொண்டே இருக்கவும்
சுயபுராணம் வாசிக்கவும்

தன்னை முன்நிறுத்தவும்
தவறுகளுக்கு நியாயம் கற்பிக்கவும்

முடியாதவைகளுக்கு
காரணம் சொல்லவும்

பலருக்கு பிடிக்கும்

பேசுவதை கேட்கவும்
பிறருக்கான வெற்றியை
பாராட்டவும்

தன் வெற்றியில் பங்களித்தவர்களை
இணைத்துக்கொள்ளவும்

தவறு ஆனால்
ஒத்துக்கொள்ளவும்
முடியாதவைகளை
செயல்பாட்டு தோல்வி
என ஏற்றுக்கொள்ளவும்

பலருக்கு பிடிக்கவே பிடிக்காது

## ஒருமுறையேனும்

பெற்ற பலனுக்கு
நன்றி கடனாய் இல்லாமல்

எதிர்பார்த்திருக்கும் சலுகைகளுக்கு
நேர் செய்ய நினைக்காமல்

புண்ணியக் கணக்கில்
வரவாகும் என எண்ணாமல்
நான் இதை செய்தேன் என
உலக அறிவிப்பு செய்யாமால்

எந்த எதிர்பார்ப்புமின்றி சகமனிதர்க்கு
ஒருமுறையேனும் உதவினால்

அப்புறம்என்ன?

மனநிறைவு கொடுத்து
தொடர்கதையாகி
வாழ்வு அர்த்தப்படும்.

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

100 ஆயுசு என்றாள்
அவள் நினைக்கையில் அழைத்தேனாம்
அப்படி பார்க்க போனால்
உனக்கெல்லாம் சாகாவரமடி தோழி
***

அந்திமாலை
பனைமரம்
அது நிழலா மரமா
***

உணவு கிடங்கு தொப்பை
உறவு கிடங்கு மனம்
***

ஆண்ட்ராய்டு போன்-ல்
எழுதப்படும் அனைத்தும்
அப்டேட்டட் கவிதைதான்
***

டெலிபதி விரிவாக்கம்
இப்பொழுதுதான் உன்னை நினைத்தேன்
பேசிவிட்டாய்
***

இன்றைய விகிதம்
1 : 1லட்சம்
உதவி : அறிவுரை
***

பகல் கனவு பலிக்காது
பகலில் தூங்காமல்
இருக்க சொன்ன பொய் அது
***

உட்கார்ந்து உண்ணும் பழக்கம்
மனிதனுக்கு உரித்தானது
அதுவும் குறையாம்
வேலைக்கு போக வேண்டும் முதலில்
***



பழகுபவர்கள்
அதிகரித்து விட்டனர்
தேவைக்கேற்ப
***

முகத்தில்
ரேகை
வயோதிகம்
***

சேர்
சே வழி
கம்யூனிசம்
***

தந்தை குளித்து துவட்டி துண்டை பிழிந்து
உதரும்போது
சாரல் வரும் அது பிடிக்கும்

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

# ரோஜா

மற்றவரை ஈர்க்கும் மணமும்
விரும்பிப் பார்த்து
திரும்பி வர வைக்கும்
குணமும் எனக்குண்டு

காதலை வெளிப்படுத்தும்
கருவி நான்.
மடிந்தாலும் மீண்டும்
பிறந்து கொண்டேயிருக்கும்
அருவி நான்.

கிள்ளி எனைப் பறித்து
அள்ளிக் கூந்தலில் வைத்தாலும் சிரிப்பை
சிந்திக் கொண்டே செல்வேன்
மெல்லிய இதழ்களைக் கண்டு
வல்லிய உள்ளமும் உருகும்

சேர்கின்ற இடத்தைப் பொறுத்து
சிறப்புப் பெறுவேன்
மகிழ்ச்சியான இடங்களில்
மங்கலமாகப் பூத்திருப்பேன்
மனம் கணக்கும் இடங்களில்
மலர் வளையமாகக் காத்திருப்பேன்

உங்கள் வாழ்வியலில்
அதிகம் வாழும்
பூவியல் நான்.



கவிஞர் விஜயலஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# அறியாத உலகமடா!



இந்த வாழ்க்கை
மனித இன பிம்பத்தில் மட்டும்
ஏன் இந்த இவ்வளவு மாற்றம்?
பல்வேறு கோட்பாடுகள்
பல்வேறு கருத்தியல்கள்
காரணம் இல்லாமல்
கண்ணீர்கள் தினம் தினம்
இறந்தும் நிகழ்ந்தும் எதிர்வரும்
பின்னோட்டமே வாழ்க்கையாக
பல்வேறு சித்தாந்தங்கள் ஏற்ற
மாறுபட்ட கூற்றுகள்
மனித இனத்தில் மட்டும்
ஆனால் மனிதனின்
உழைப்பும் உன்னதமும்
ஒருநாளும் மாறுவதில்லை
ஏழை குடிலில் இந்த உலகம் விரைவில்
விஞ்ஞான விபரீதத்தில்
விளைந்து போகுமே தவிர
வளர்ந்து போகாது
வஞ்சகம் என்பது
ஏற்றத்தாழ்வு அடிப்படையில்
கடந்து கொண்டிருக்கிறது
அது காலம் முழுக்க அப்படியே கடக்கும்
அறியாத உலகமடா இது
அறிந்த பின்பும் கழகமடா.

காத்திருந்தாலும்
கனி கிடைப்பதில்லை இன்று
அது நன்று நீ ஒன்று
தெளிந்து நின்று.

கவிஞர் ம. செல்லமுத்து, நீர்த்தப்பூர்

# தன்முனைக் கவிதைகள்

1. பேத்திக்கு வாங்கிய
   ஜவ்வு மிட்டாய் கடிகாரம்
   நினைவில் இனிக்கும்
   என் பள்ளிப் பருவம்

2. உதிரம் உறுப்பு தானத்தால்
   இதயத்தை மாற்றும் சிகிச்சை
   புதிய உடலில் ஒன்றாய்
   எல்லா ஜாதியும மதமும்

3. கருவாய்த் தங்கிய
   மகளின் உருவம்
   மருத்துவர் காட்டிட
   மனதினுள் தூவானம்

4. 'மதத்'தைப் போதிக்கும்
   மாந்தரைத் தூற்றுவோம்
   மதங்கள் முன்னிருத்தும்
   மனிதத்தைப் போற்றுவோம்

5. வறுமையை ரசிக்கிறேன்
   பசியையும் ருசிக்கிறேன்
   இல்லாமையைக் கொண்டாடியே
   இருப்பதைப் பகிர்கிறேன்



கவிஞர் ரவிஜி

காஞ்சனா ஆச்சி வீடு

அத்தியாயம் - 17

புதினம்



மாலையில் அரசுவை ஆச்சியின் வீட்டில் சொல்லி இறக்கி விட்டுக் கிளம்பினார்கள் திலக்கும் அவன் தங்கைகள் இருவரும். இட்லி சாப்பிட கொடுத்தார்கள். சாப்பிட்டு விட்டு அவனுக்குக் கொடுக்கப்பட்ட அறையில் வந்து படுத்துக்கொண்டான். அரசு அப்பாவிடம் சவால் விட்டு வெளியே வந்ததிலிருந்து ஒவ்வொன்றாக நினைத்துப் பார்த்தான்.

'சூரியன் காலையில் உதித்து மாலையில் மறைவது போல, எல்லோரும் - நண்பர்கள் வட்டம் அனைவருமே அப்பாவின் சம்பாத்தியத்தை பெருக்கிக் கொண்டிருக்க.... நான் மட்டும் ஏன் பிடிவாதம் பிடித்து அலைந்து கொண்டிருக்கிறேன். நான் இப்படி அவர்களிடமிருந்து ஒதுங்கி ஓடிக் கொண்டிருப்பது தவறோ?' என்று நினைத்துக் கொண்டே தூங்கிப்போனான்.

மறுநாள் அலுவலகம் போனபோது மாட்டுத் தீவனம் தயாரிப்பதற்கான முறைகள், அவைகள் எப்படி கலந்து உருவாக்கப் படுகிறது என பூனம் அவனுக்கு விளக்கிக் கொண்டிருந்தாள். அரசு மிகக் கவனமாக வேலை செய்தாலும் நினைவில் அம்மா வந்து கொண்டிருந்தாள். ஒரு வாரம் முடிந்து விட்டது. நாட்கள் ஓடியது கூடத் தெரியவில்லை.

"திலக்.. நீ மும்பைக்குத் திரும்பப் போகிறாய்... நான் இங்கே உனக்கு உழைத்துப் போடவோ... இல்லைக் கணவனை இழந்த தங்கைக்கு உதவி செய்யவோ வரவில்லை. ஏற்கனவே மும்பையிலிருந்து கிளம்பிய போதே நான் சொன்னவைகள் ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன்." நகத்தைக்கடித்துக் கொண்டே ரொம்ப டென்சனாக சப்தமிட்டான் அரசு.

"என்ன சூடாகி விட்டாய்... நான் உன் நிலமையைப் பயன்படுத்திக் கொண்டு உன்னை உபயோகப் படுத்தி ஆதாயம் தேடிக்கொள்ளலாம்

என்று நினைக்கிறாயா? கூல் டௌன் மைடியர். நான் சொல்வதற்காக வருத்தப் படாதே."

"யேய்... என்னை வீணாக வெறுப்பேற்றுகிறாய்?", "புரியாமல் ...சும்மா வீணாக கூவாதே" , "சாரி... ரியலி ஸாரி" தணிந்தான் அரசு.

"மஹாராஷ்டிரா இண்டஸ்ரிஸ் டெவலெப்மெண்ட் கார்பொரேஷன் காரன் ஒருவனை கைக்குள் வைத்துக் கொண்டு உன் வியாபாரத்திற்கான லோனுக்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். இன்று நாம் அவனை போய்ப் பார்க்கப் போகிறோம்."

"நான் இப்படிச் சொல்வதில் உனக்கு எதுவும் கோபமில்லையே."என்றான் திலக்கின் முதுகில் தட்டிய அரசு.

'டோண்ட் ஒர்ரி, அரசு. பழகி கொஞ்ச நாளாக நல்லதொரு நண்பனாகி விட்டாய். ஏதோ முன்பிறவியில்நீயும் நானும் இணை பிரியாத நண்பர்களா இருந்திருப் போமோ என்று தோன்றுகிறது."

"ஏதோ சொல்ல வந்தாயே...?" , "அது.. அது.. வந்து.. திலக்."

"சும்மா தயங்காமல் சொல்லப்பா.", "இல்லை... உன்னிடம் உதவி கேட்டு வந்து விட்டு உன் வியாபாரத்திலேயே உனக்கு போட்டிப் போட நினைக்கிறேன்."

"இந்த வியாபாரம் என்பது ஒரு கடல்மாதிரி. யார் மூழ்கி முயற்சி செய்கிறார்களோ அவர்கள் கண்டிப்பாக முத்தெடுக்க முடியும்."

"நீ உன் வழியில் உன் வியாபாரத்தை விரிவாக்கு. சரி...சரி.. நேரமாகி விட்டது. அந்த எம்.ஐ.டி.சி. ஆபீசரை போய்ப் பார்க்க வேண்டும்" என்று கூறி திலக் எழுந்த போது "அண்ணா டீ கொண்டு வரட்டுமா?" என்று கேட்டாள் அனாமிகா.

"அதெப்படி... சாயா குடிக்க வேண்டும் என்று நான் நினைக்கும்போது நீ டீ தரட்டுமா என்கிறாய்.." என் மனதைப் படிக்கிறாயா?" என்றான் அரசு அனாமிகாவிடம்.

"போங்கள்.. உங்களுக்கு எப்போதும் குறும்புதான்." என்றவாறு இரண்டு கப்களில் சாயா ஊற்றினாள் அனாமிகா.

"அரசு நீ கப்போலி வந்ததிலிருந்து என் வீடே மாறிப் போயிருக்கிறது. என் மூத்த தங்கை பூனம் வியாபாரத்தில் உன்னோடு போட்டி போட புதிய ஆர்டர்கள் தேடி அலைய ஆரம்பித்திருக்கிறாள்."

"இந்த அனாமிகவோ தமிழ் படிக்க ஆரம்பித்திருக்கறாள். ஒன்று தெரியுமா? என் வீட்டிலே முப்பது நாளில் தமிழ் படிப்பது எப்படி என்ற மராத்தி புத்தகம் கூட நடந்து வந்திருக்கிறது."

"நீ தங்கி இருக்கும் ஆச்சியிடம் ஒவ்வொரு மராத்தி வார்த்தைக்கும் தமிழ் அர்த்தம், உச்சரிப்பு, அதனோடு ஒத்த வார்த்தைகள்... என்று கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கிறாள். இது எங்கே போய் முடியுமோ?" என்று ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே சிரித்தான் திலக்.

கன்னங்கள் சிவந்து போய் "நீ சும்மா இருக்க மாட்டாயா?" என்று அண்ணனிடம் சிணுங்கினாள் அனாமிகா.

"உண்மையிலே அனாமிகா சிணுங்கும்போது இன்னும் அழகாக இருக்கிறாள்." என்று அரசு சொல்ல "சீ..." என்று சொல்லிக்கொண்டே ஓடினாள் வெளியே.

"நல்ல பெண், அது போகட்டும் திலக், வீணாக கற்பனைகளை வளர்த்துக் கொள்ளச் சொல்லாதே. அப்புறம் மிகவும் கஷ்டமாகி விடும்."
என் அம்மா ரொம்ப தமிழ் தெரிந்த ஓரளவு அழகான அலட்சியமான பெண்ணை எனக்காகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பின்னாலே

சிக்கல்கள் எதுவும் வந்து விடக்கூடாது."

"நீ ஒன்றும் இந்தச் சிக்கல்களில் விழாமல் இருந்துகொள் அரசு. இந்த வயதில் வரும் ஒரு வகையான மன லயம் அப்புறம் ஒருமனப்பட்டு பக்குவப் படும் போது சரியாகி விடும்."

"ஆமாம் அரசு இ..மெயிலில் ஏதோ ஆர்டர் கிடைத்திருக்கிறதென்று சொன்னாயே.. என்ன டெர்ம்ஸ் அண்ட் கண்டிஷன்ஸ்.. எத்தனை பேக் ஆர்டர்கிடைத்திருக்கிறது."

"நம்ப மாட்டாய் திலக். முப்பத்தேழு லட்ச ரூபாய்க்கான ஆர்டர் கிடைத்திருக்கிறது. உன் மும்பை தொழிற்சாலையும் இந்த பூனத்தின் கப்போலி தொழிற்சாலையும் ஒரு மாதம் இரவு பகலாக எனக்காக தயாரித்தால் மீதியை வெளியிலே இருந்து வாங்கி அனுப்பி விடுவேன். எல்லாம் எல்.சி. போட்டு அனுப்புவதால் பணம் பிரச்சினையுமில்லை."

"அத்தோடு நீபார்த்திருக்குமிடத்தில் என்னுடைய தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டி ஒரு சிறிய கட்டிடம் கட்டிட இந்த ஆர்டர் முடிந்ததென்றால் பண உதவி அதிகமாக இருக்கும்."

"வெரிகுட் அரசு. உன் தீவிரம் உண்மையிலேயே ஆச்சரியமாக இருக்கிறது. இந்த வியாபாரத்திலே பத்து வருடமாக உருளுகிற எனக்கு, போன மாதம் தான் ஒரு சிறிய வெளிநாட்டு எக்ஸ்போர்ட் ஆர்டர் கிடைத்தது."

"நீ கப்போலி வந்து உடனே கொடி நாட்ட ஆரம்பித்து விட்டாய். அது சரி, ஏதோ சொல்ல வந்தாயே.."

"ம்... என் நண்பன் குட்டி ஒரு சின்ன ஷிப்பிங் கம்பெனி வைத்திருக்கிறான். அதை விரிவடையச் செய்ய என்னைக் கூப்பிட்டான். நவசேவாவில் அவனோடு அதையும் ஒரு பகுதியாக செய்யலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்."

"வா.. மவனே... உன் காட்டில் மழை பெய்கிறது. அப்படியே நீ அன்று

சொன்ன மாதிரி கன்டெய்னர் பிஸினசையும் ஒரு வழி பார்த்து விடு."
"ஆமாம். அங்கே நுழைந்து விட்டால் லாஜிஸ்டிக் ஃபிரைட் ஃபார்வார்டிங்... கஸ்டம்ஸ் க்ளீயரன்ஸ் இப்படி எத்தனையோ இருக்கின்றன."
"அதையும் தாண்டி, கண்டெய்னர் ஃபிரைட் ஸ்டேஷன், வேர் ஹவுசிங், க்ரேன், ஃபோர்க்லிப்ட், டிரான்ஸ்போர்ட் என்று ஒரு பெரிய வியாபார சாம்ராஜ்யம் காத்துக் கிடக்கிறது."
"பரவாயில்லை அரசு. இவ்வளவு விஷயங்களைத் தெரிந்து வைத்திருக்கிறாயே. அது தான் ஆச்சரியமாக இருக்கிறது. அன்று என்னோடு என் வீட்டிலேயே காந்திவிலியில் பார்த்த அரசு தானா என்று சந்தேகம் கூட வருகிறது. கண்டிப்பாக சுயமாக காலூன்றி விடுவாய்... சரி... சரி... சாயா ஆறுது பார். குடி. எம்.ஐ.டி.சி. அலுவலகம் புறப்பட வேண்டும்."

"நான் தனியே ஆரம்பிக்கிறவரை உன் தங்கை பூனத்தோடு உன் தொழிற் சாலையின் உற்பத்தியில் பங்கெடுத்து கொள்ளலாமா?"
"உனக்கு அடிக்கடி சில்லியான சந்தேகங்கள் வருகிறது அரசு. அதற்காகத்தானே நான் உன்னை கப்போலி அழைத்து வந்ததே."

"மேலும் என் தொழிற்சாலையில் நீ பணிபுரியும் போது பலனடையப் போவது நான் தானே... மேலும் உன் சுய தொழிலுக்கு ஒரு புது அனுபவமாகவும் இருக்கும்."
"ஆனால் நான் உன்னிடம் சொல்லக் கூடாதுதான். இருப்பினும் நான் மும்பைத் திரும்புவதால் சொல்லித்தான் ஆகவேண்டும்."

"முந்தாநாள் பூனம் உன் மேல் சரிந்து விழுந்தது வேண்டுமென்றே செய்தது போல் எனக்குப் பட்டது. நீ அதை சாதாரணமாக எடுத்துக் கொண்டு அவளைத் தூக்கி விட்டாய். திரும்பவும் அவளுடைய அண்ணன் என்று மட்டுமல்ல.. உன் வெல் விசராகவும் சொல்கிறேன். இந்தப் பெண்கள் விஷயத்தில் வீணாக சிக்கிக் கொள்ளாதே. உன் கொள்கைகள், நீ கொண்டிருக்கும் லட்சியம் எல்லாம் காணமல் போய் விடும்."

காஞ்சனா ஆச்சி வீடு

அத்தியாயம் - 17

புதினம்

"கவலையே படாதே. நானே இதைப் பற்றி பேச வேண்டும் என்று நினைத்தேன். இவ்வளவு இருந்தும் இங்கே உன் தங்கையோடு வியாபாரத்தைக் கவனித்துக் கொள்ளச் சொகிற உன் மனசுஇமயம் திலக்." கண்ணீர் மல்கச் சொன்னான் அரசு.

"அப்பா பசிக்குதுண்ணு நினைக்கிறதுக்கு முன்னாலே வந்து நிற்குது பாரு சாப்பாடு" என்று திலக் சொல்ல திரும்பிப்பார்த்தான் அரசு.

கையில் தூக்கு சாப்பாட்டுடன் நின்றாள் அனாமிகா, திலக்கின் அடுத்தத் தங்கை.

'கொஞ்சம் சுவரசியமானவள்' என்று நினைத்துக் கொண்டான் அரசு.



தொடரும்...

கவிஞர் இரஜகை நிலவன்

# மாதொருபாகன்

## நூல் அனுபவம்

ஆசிரியர் : பெருமாள் முருகன்

பெருமாள் முருகன் இவர் எழுத்தாளர் என்பதை தாண்டி தமிழ் பேராசிரியர். இந்த நாவலின் பெயரே வித்தியாசமாக இருந்தது.
ஆனாகி பெண்ணாகி நின்றானவன் பெண்ணுக்கு சரிபாதி தந்தானவன் என்று ஒரு திரையிசை பாடல் வரும்

மாதொருபாகனார்க்கு வழி வழி அடிமை செய்யும்
வேதியர் குலத்துள் தோன்றி மேம்படு சடையனார்க்கு
ஏதமில் கற்பின் வாழ்க்கை மனை இசை ஞானியார்பால்
தீதகன்று உலகம் உய்யத் திரு அவதாரம் செய்தார்!

திருநாவலூரில் அவதரித்த சுந்தரமூர்த்தி நாயனாரின் அவதாரத்தை சொல்லும் பாடலிது

"மாதொரு பாகம் நோக்க மன்னு சிற்றம்பலத்தே
ஆதியும் முடிவும் இல்லா அற்புதக் கூத்தாடும்நாதனார்"

இது தில்லையம்பலம் என்றும் திருச்சித்திர கூடமென்றும் சிதம்பரம் என்றும் கொண்டாட படக்கூடிய சிதம்பரத்தில் சகல உலகுக்கும் ஈசனாகிய சர்வேஸ்வரன் அருளும் நடனத்தின் திறன் குறித்து சொல்லும் பாடல் இந்த பாடலுக்கு எனது புரிதலின் அடிப்படையில் விளக்கம் கொடுக்கிறேன்
மாதொரு பாகம் நோக்க என்பது உமையவளை நோக்கி சிற்றம்பலம் சிதம்பரத்தில் ஆரம்பமும் முடிவும் இல்லாத ஈசன் ஆடுகிறார் அற்புத கூத்தாடுகிறார் என்பதாகவே நான் புரிந்து கொண்டேன் இதற்கு பிறகு நாவலுக்குள் சொல்வோம்.




திரு தினேஷ் கண்ணா, வழுதாவூர்

## நூல் அனுபவம்

திருச்செங்கோட்டில் நாவல் தொடங்குகிறது. குழந்தையின்மை பிரச்சினையை வைத்து கொண்டு ஒரு சமூகம் படும்பாடு பெரும்பாடு. குழந்தை இல்லையெனில் யாரும் மதிக்க கூட மாட்டார்கள் கூடவே ஒதுக்கி விடுவார்கள் என்பது நிதர்சனமான கசப்பான உண்மை.
அங்க நடக்கும் பெருந்திருவிழா அதை சாக்கிட்டு நடக்கும் ஊடல்கள் யாரோ யார் என்று தெரியாதவர்களுடன் நடக்கும் கூடல்கள் என்று இந்த கதை ஏன் இப்படி செல்கிறது என்று யோசிக்க வைத்தது. இரண்டெழுத்து பெயரை இவர் குறிப்பிடும் போதெல்லாம் மனசு ஏதோ பாரம் தாங்குவது போல உணர்கிறது.
மதுவிலக்கு குறித்த விஷயங்கள், காட்டுக்குள்ளும் கிணற்றடிக்குள்ளும் இருக்கும் இரகசிய குகைகள் என்று நீள்கிறது நாவல்.

திருச்செங்கோட்டு நில,வாழ்வியல் அமைப்பை பிசிறு தட்டாமல் பதிவு செய்கிறார் பெருமாள் முருகன் இந்த நாவல் வெளிவந்த நேரத்தில் அவருக்கு பல எதிர்ப்புகள் கிளம்பின அந்தளவுக்கு நுட்பமாக மக்களின் வாழ்வியலை பதிவு செய்கிறார். எனக்கென்னவோ இவர் சொன்ன கருத்துகள் சரியென்றே படுகிறது.
திருவிழா குறித்த இவரது பார்வைகள் கொஞ்சம் ஆராயப்பட வேண்டும்.

அதே சமயம் திருச்செங்கோடு சென்று வந்த உணர்வினை ஊட்டி விடுகிறார் பெருமாள் முருகன்.
திருவிழா சமயங்களில் ஊர்கள் தோறும் பொதுச்செலவில் செய்யப்படும் நீர்மோர் பந்தல்கள் வருடமுழுக்க யார் வந்தாலும் முகம் சுலிக்காமல் உணவளிக்கும் அன்னச்சத்திரங்கள் என்று திருவிழாவையொட்டி நடக்கும் சமூக, பொருளாதார மாற்றங்கள், பலதரப்பட்ட மக்களின் சந்திப்புகள் என்று நீள்கிறது கதை. இந்த நாவல் வெளிவந்த நேரத்தில் இந்த நூல் மீதும் நூலாசிரியர் மீதும் வழக்குகள் பதியப்பட்டன என்று கேள்வியுற்றேன் அப்போது 'பேனாவின் முனை வாளின் முனையைவிட கூர்மையானது'. என்று படித்தது நினைவுக்கு வந்தது.
அப்படி வழக்கு பதிவு செய்யபட்ட நேரத்தில் பெருமாள் முருகனுக்கு துணையாக நின்று குரல் கொடுத்தவர்கள் தமிழ் நாடு எழுத்தாளர்கள்

திரு தினேஷ் கண்ணா, வழுதாவூர்

முன்னேற்ற சங்கம் #தமுஎச என்பது குறிப்பிடத்தக்கது.
இந்த நாவல் சொல்ல வரும் கருத்து ஆணும் பெண்ணும் சரியென கொள்வதால் குழந்தையின்மை பெருங்குற்றம் எனும் கருத்துக்கு மரண அடியாக இந்த நாவல் வெளிவந்திருக்கிறது.
இப்போது கருத்தரிப்பு மையங்கள் பெருகி விட்ட காலம் ஆனால் அப்போது சாமிப்பெயரை சொல்லியே நடந்திருக்கிறது.

இப்போது வணிக மையம் அப்போது பக்திமையம் என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வளவு பெரிய தாக்கத்தை ஒரு எழுத்தாளனால் உருவாக்க முடிந்திருக்கிறது இதுவும் எழுத்தாளனின் சாதனைகளில் ஒன்று. சரி இந்த நாவல் படித்தால் என்ன கிடைக்கும் என்றால் நீங்கள் நேராக திருச்செங்கோட்டுக்கு சென்று வாழ்ந்த உணர்வை இந்த நூல் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

வாசிப்பை நேசிப்போம்
தொடர்ந்து பயணிப்போம்!




திரு தினேஷ் கண்ணா, வழுதாவூர்

# கவியரசர் கண்ணதாசன்



சிவகங்கை மாவட்டம் செட்டிநாடு பகுதியின் சிறுகூடல்பட்டியில் பெற்றோர் சாத்தப்பனார் - விசாலாட்சி ஆச்சிக்கு 1927, ஜூன் 24 ல் பிறந்தவர் முத்தையா, பின்னாளில் கண்ணதாசன் ஆனது சுவாரசியமான கதை. அதை அவரது 'வனவாசம்' நூலைப் படித்தால் உணரலாம்.

**கல்வி:** சிறிகூடல்பட்டியில் ஆரம்பக்கல்வி, அமராவதி புதூர் உயர்நிலைப்பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை படித்தார். 15 வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார். 17 வயதில் அவரது முதல் கவிதை வெளிவந்தது.

**புனைப்பெயர்** - காரை முத்துப் புலவர், வணங்காமுடி, கமகப்பிரியா, பார்வதிநாதன், ஆரோக்கியசாமி

**தொழில்** - கவிஞர், பாடலாசிரியர், அரசியல்வாதி, திரைப்பட தயாரிப்பாளர், இலக்கிய ஆசிரியர்

**எழுதிய காலம்:** 1944 - 1981

**முதல் குறுங்காவியம்:** மாங்கனி. இவை டால்மியாபுரம் பெயர் மாற்றப் போராட்டத்தில் சிறையிலிருந்துகொண்டு படைத்தது. (1952-53)

**மணவாழ்க்கை:** 1950ல் கண்ணதாசனின் மண வாழ்க்கை தொடங்கியது. கவிஞருக்கு மூன்று மனைவிகள். முதல் மனைவி பெயர் பொன்னழகி என்கிற பொன்னம்மா. இவர்களுக்கு கண்மணிசுப்பு, கலைவாணன், ராமசாமி, வெங்கடாசலம் ஆகிய 4 மகன்கள். அலமேலு, தேனம்மை, விசாலாட்சி ஆகிய 3 மகள்கள் (விசாலாட்சி என்பது கண்ணதாசனின் தாயாரின் பெயர்).

இரண்டாவது மனைவி பார்வதிக்கு காந்தி கண்ணதாசன், கமல், அண்ணாதுரை, கோபால கிருஷ்ணன், சீனிவாசன் ஆகிய 5 மகன்கள். ரேவதி, கலைச்செல்வி ஆகிய 2 மகள்கள். (காந்தி கண்ணதாசன் தற்போது 'கண்ணதாசன் பதிப்பக'த்தின் அதிபர்).

மூன்றாவது மனைவி புலவர் வள்ளியம்மைக்கு, விசாலி மனோகரன் என்ற ஒரே மகள். (கண்ணதாசன் இறந்தபோது விசாலிக்கு 4 வயதுதான். பிற்காலத்தில், சினிமாவிலும், டெலிவிஷன் தொடர்களிலும் நடித்தார்). கண்ணதாசன் தன் வாழ்க்கை வரலாற்றை, ஒளிவு மறைவு இன்றி 'வனவாசம்' என்ற பெயரில் புத்தகமாக எழுதினார். அது அவருடைய மறுபக்கத்தையும் படம் பிடித்துக் காட்டுகிறது. தன் குணச்சித்திரத்தை இரண்டே வரிகளில் பாடலாக எழுதியுள்ளார்.



'ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு; ஒரு கோலமயில் என் துணை இருப்பு' என்பதே அப்பாடல். இப்பாடல், அவரே பாடுவது போல ரத்த திலகத்தில் இடம் பெற்றுள்ளது.

**அரசியல்:** 1949ல் திமுக தொடங்கி அரசியலில் பல்வேறு அனுபவங்களை தந்தது.

**திமுகவிலிருந்து விலகல்:** 1960-61 ஆம் ஆண்டுகளில் தி.மு.க.விலிருந்து விலகிச் சிறிது காலம் கழித்துக் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார்.

ஆரம்ப காலத்தில் பகுத்தறிவு என்ற போர்வையில் நடந்த நாத்திக பிரசாரத்தில் மூழ்கிய கண்ணதாசன், அதிலுள்ள ஏமாற்றுவித்தையை உணர்ந்து ஆத்திகப் பாதைக்கு திரும்பினார். ஆரம்ப காலத்து திமுக தலைவர்களுள் ஒருவராக விளங்கிய கண்ணதாசன், அரசியலில்

துரோகமும் சுயநலமும் கோலோச்சுவது கண்டு விரக்தியுற்று 1960-61 ஆம் ஆண்டுகளில் அதிலிருந்து விலகினார். சில காலம் காங்கிரஸ் ஆதரவாளராக இருந்த அவர் அரசியல் தனக்கு ஒத்துவராது என்று முற்றிலும் விலகினார்.

கண்ணதாசனின் ஆளுமை என்பது, அவரது சாகாவரம் பெற்ற இலக்கியங்களில் தான் நிலைகொண்டுள்ளது. நான்காயிரத்திற்கு மேற்பட்ட கவிதைகள், ஐயாயிரத்திற்கு மேற்பட்ட திரைப்பாடல்கள், அற்புதமான துள்ளுதமிழ் நடையுடன் கூடிய நூல்கள், கட்டுரைகள், சிறு காப்பியங்கள், நவீனங்களை எழுதியது கண்ணதாசனின் சாதனை. தமிழில் புதிய மறுமலர்ச்சியை பாரதிக்குப் பிறகு ஏற்படுத்தியவர் கண்ணதாசனே.

இவரது 'சேரமான் காதலி' என்ற புதினம் 1980 ல் சாஹித்ய அகாதெமி விருது பெற்றது. 'குழந்தைக்காக' என்ற திரைப்படத்திற்கு எழுதிய திரைவசனத்திற்காக (1961) இவருக்கு தேசிய விருது கிடைத்தது. திரைப்படல்களிலும் செந்தமிழ் துள்ளி விளையாடுவது கண்ணதாசனின் சிறப்பு. பண்டைய இலக்கியங்களில் அவருக்கு இருந்த தேர்ச்சி திரைப்பாடல்களில் வெளிப்பட்டது. சந்தமும், செந்தமிழும் எந்த சிரமும் இன்றி கைகொர்த்தன, கண்ணதாசனின் பாடல்களில். அவர் ஆசுகவியாகவே திகழ்ந்தார்.

**பத்திரிக்கை:** அரசியல்வாதி, திரையிசைக் கவிஞர், வசனகர்த்தா, எழுத்தாளர், நடிகர், படத் தயாரிப்பாளர் என்ற பன்முகங்களுடன், பத்திரிகையாசிரியராகவும் கண்ணதாசன் விளங்கினார். அவர் நடத்திய சண்டமாருதம், திருமகள், முல்லை, திரை ஒலி, மேதாவி, தென்றல், தென்றல் திரை, கண்ணதாசன் ஆகிய இதழ்கள் தமிழ் இதழ்களின் வரலாற்றில் குறிப்பிடத் தக்கவையாக இன்றும் பேசப்படுகின்றன. குறிப்பாக தென்றலில் அவர் தீட்டிய கூர்மையான அரசியல் நையாண்டியுன கூடிய உருவக கட்டுரைகள் அக்காலத்தில் பெரும் விழிப்புணர்வையும் பரபரப்பையும் உருவாக்கின.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

**அரசவை கவிஞர்:** தமிழ்நாட்டின் 'அரசவை கவிஞராக (ஆஸ்தான கவிஞர்) கண்ணதாசனை எம்.ஜி.ஆர். நியமித்தார். தமிழ்நாட்டில், காங்கிரஸ் ஆட்சியின்போது நாமக்கல் கவிஞர் வெ.ராமலிங்கம் பிள்ளை அரசவைக் கவிஞராக இருந்தார். அதன் பிறகு அப்பதவி ரத்து செய்யப்பட்டது. 1977 தேர்தலில் எம்.ஜி.ஆர். வெற்றி பெற்று, தமிழக முதல்வரானார். அவர் கண்ணதாசனை, 28-3-1978-ல் 'அரசவைக் கவிஞர்' ஆக நியமித்தார்.

**கண்ணதாசனின் நூல்கள்:**

- இயேசு காவியம்
- அர்த்தமுள்ள இந்து மதம் (10 பாகங்கள்)
- மாங்கனி

**கவிதை நூல்கள்:**

- கண்ணதாசன் கவிதைகள் - 6 பாகங்களில்
- பாடிக்கொடுத்த மங்களங்கள்
- கவிதாஞ்சலி
- தாய்ப்பாவை
- ஸ்ரீகிருஷ்ண கவசம்
- அவளுக்கு ஒரு பாடல்
- சுருதி சேராத ராகங்கள்
- முற்றுப்பெறாத காவியங்கள்
- பஜகோவிந்தம்
- கிருஷ்ண அந்தாதி, கிருஷ்ண கானம்

**புதினங்கள்:**

- அவள் ஒரு இந்துப் பெண்
- சிவப்புக்கல் மூக்குத்தி
- ரத்த புஷ்பங்கள்
- சுவர்ணா சரஸ்வதி
- நடந்த கதை
- மிசா
- சுருதி சேராத ராகங்கள்
- முப்பது நாளும் பவுர்ணமி
- அரங்கமும் அந்தரங்கமும்
- ஆயிரம் தீவு அங்கயர்கண்ணி
- தெய்வத் திருமணங்கள்
- ஆயிரங்கால் மண்டபம்
- காதல் கொண்ட தென்னாடு
- அதைவிட ரகசியம்
- ஒரு கவிஞனின் கதை
- சிங்காரி பார்த்த சென்னை
- வேலங்காட்டியூர் விழா
- விளக்கு மட்டுமா சிவப்பு
- வனவாசம்
- அத்வைத ரகசியம்
- பிருந்தாவனம்
- வாழ்க்கைச்சரிதம்:
- எனது வசந்த காலங்கள்
- எனது சுயசரிதம்

**புதினங்கள்:**

- எனது வசந்த காலங்கள்
- எனது சுயசரிதம்
- வனவாசம்

**கட்டுரைகள்:**

- கடைசிப்பக்கம்
- அந்தி, சந்தி, அர்த்தஜாமம்
- எண்ணங்கள்
- வாழ்க்கை என்னும் சோலையிலே
- ஞானாம்பிகா
- இலக்கியத்தில் காதல்
- இலக்கிய யுத்தங்கள்
- போய் வருகிறேன்
- நான் பார்த்த அரசியல்
- தாயகங்கள்
- குடும்பசுகம்
- ராகமாலிகா
- தோட்டத்து மலர்கள்
- போய் வருகிறேன்

**நாடகங்கள்:**

- அனார்கலி
- சிவகங்கைச்சீமை
- ராஜ தண்டனை

**மறைவு**

கவிஞர் வெள்ளித்திரையில் ஒரு முடிசூடா மன்னராகத் திகழ்ந்தவர். உடல்நிலை காரணமாக 1981, ஜூலை 24 இல் சிகாகோ நகர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு, அக்டோபர் 17 சனிக்கிழமை இந்தியநேரப்படி 10.45 மணிக்கு மறைந்தார்.

**நன்றி : தினமணி**

## நாளை நமதே

# தன்னைத்தானே
# சரி செய்துகொள்ள
# முயலுங்கள்
# அதைவிட சிறந்த மாற்றம்
# வேறொன்றுமில்லை

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com